# THE GANDHIGRAM RURAL INSTITUTE

**(Deemed to be University)**
**GANDHIGRAM -624 302, DINDIGUL DISTRICT - TAMILNADU**
**(Ministry of Education (Shiksha Mantralaya), Govt. of India)**
**Accredited by NAAC with 'A++' Grade (4th Cycle)**

*All communication should be addressed to the Registrar by designation and not by name*

EPABX No : (0451) 2452371-2452376
Phone : (0451) 2452323
Fax : (0451) 2454466
E.mail : grucc@ruraluniv.ac.in
Website : www.ruraluniv.ac.in

**Dr.M.SUNDARAMARI**
REGISTRAR i/c


Ref: Res.Cell/S1/Ph.D Sch./2025-26/12 26.12.2025

## CIRCULAR

Sub: GRI (DTBU) – Scholarship for Ph.D. Full-time Research Scholars (SC,ST&SCC) for the year – 2025-26 – reg.

Ref: 1. Tamil Nadu Government notification vide order no.24 Adi Dravidar and Tribal Welfare Department dated 23.12.2025
2. Approval of the Vice Chancellor date 26.12.2025

*****

With reference to the order issued by the Department of Adi-Dravidar and Tribal Welfare Board, Government of Tamil Nadu, it is informed that a **Scholarship for Ph.D. Full-Time Research Scholars** belonging to **SC/ST/SCC communities** of **Tamil Nadu** has been announced for the academic year **2025–26** in recognized Institutions.

Eligible scholars are hereby requested to apply for the scholarship through the **online application portal** available at **https://adwphdscholarship.in/.** The instructions for application are also available at **www.tn.gov.in/formdept_list.php.**

The scholarship amount will be **credited directly to the students' bank account**.

Applicants must complete the online application and send a **hard copy of the submitted application along with required documents** to the address given below **on or before 31.01.2026 at 5.45 p.m.**

**Address:**

The Director
Adi-Dravidar Welfare Department
Ezhilagam (Link Building)
Chepauk, Chennai – 600 005.

For further details, applicants may contact the **Reservation Cell during working hours** or visit the official website mentioned above.

26/12/25

**REGISTRAR i/c**

To

1. All the Deans/HODs/Directors/Co-ordinators/Research Supervisors/Dean, Students' Welfare/ All Notice Boards.
2. The Director, Computer Centre: - to display GRI website "Students corner", Intra-mail & Reservation Cell portal.

Cc: PS to VC/PS to Registrar/Finance Section/Academic Section/File.

Encl: Notification received from the Adi Dravidar and Tribal Welfare Office, Chennai.

***Note:*** ***Scholars/Students can apply for all available scholarship schemes provided by the State/Central Government & Others, but he/she can claim/avail any one of the highest amount of scholarship other awarded amount has to be refunded to the concern sanctioned authorities.***

29/12/25

செய்தி வெளியீடு எண்: 3058 நாள்: 23.12.2025

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முழுநேர முனைவர் பட்டப் படிப்பு பயிலும் (Ph.D) புதிய மற்றும் புதுப்பித்தல் (Fresh and Renewal Students) மாணாக்கருக்கான ஊக்கத் தொகைத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயற்படுத்தப்படும் முழுநேர முனைவர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கான கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D) பயிலும் புதிய மற்றும் புதுப்பித்தல் (Fresh and Renewal Students) மாணாக்கர் https://adwphdscholarship.in/ என்ற இணையவழியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. மேலும் திட்ட விதிமுறைகள் ("www.tn.gov.in/formdept_list.php") என்ற இணையதள முகவரியில் யாவரும் அறியும் வண்ணம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.01.2026 நாளன்று மாலை 5.45 மணிக்குள், "ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம், எழிலகம் (இணைப்பு), சேப்பாக்கம், சென்னை-600 005" என்ற முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முந்தைய கல்வியாண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

| | |
|---|---|
| | தமிழ்நாடு அரசு<br>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை |
| | எழிலகம் (இணைப்பு), சேப்பாக்கம், சென்னை - 600 005. |

அரசாணை(நிலை) எண்:72 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 16.09.2024 இன்படி முழுநேர முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணவர்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ.1,00,000/- வீதம் 2000 மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D) பயிலும் புதிய / புதுப்பித்தல் (Fresh / Renewal) மாணாக்கர் https://adwphdscholarship.in/ என்ற இணையவழியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

## I. விதிமுறைகள் :

1. தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D.,) மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் மட்டும் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர். பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெற இயலாது.

2. அரசாணை(நிலை) எண்:24 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 24.02.2025 இன்படி முழுநேர முனைவர் பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கருக்கு அவர்கள் கல்விப்பயிலும் பல்கலைக் கழகத்தால் அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் (அல்லது) மாணாக்கர் ஆய்வேட்டை (Thesis) சமர்ப்பிக்கும் ஆண்டு வரை (அல்லது) அதிகபட்சமாக ஐந்தாண்டுகள், இதில் எதில் முந்தையதோ அதுவரையில் மட்டுமே ஊக்கத்தொகை வழங்கப்படும்.

3. ஏற்கனேவ இத்திட்டத்தின்கீழ் ஊக்கத்தொகை பெற்று நடப்பாண்டிற்கு புதுப்பித்தல் (Renewal) பெற விண்ணப்பிக்கும் மாணாக்கருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்ட பின் மீதமுள்ள காலி இடங்களுக்கு முதலாமாண்டிற்கு விண்ணப்பிக்கும் புதிய (Fresh) மாணாக்கருக்கு கீழ்க்கண்டவாறு பாடப்பிரிவு வாரியான ஒதுக்கீட்டின்படி இதர தகுதிகளுக்குட்பட்டு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

| வ.எண் | பாடப்பிரிவுகள் | இடஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | கலை (Linguistics) | 10% |
| | கலை (Education, Commerce, Management, Architecture, Mass Communication, Design) | 20% |
| 2. | அறிவியல் ( Pure Science) | 20% |
| | பயன்பாட்டு அறிவியல் (Applied Science, Medical, Engineering) | 40% |
| 3. | களம் 1 மற்றும் 2இல் இடம் பெறாத பாடப்பிரிவுகள் | 10% |

4. மேற்கண்ட பிரிவுகளில் பெறப்படும் விண்ணப்பங்களில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் கூடுதலாகவும், குறைவாகவும் அல்லது விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் அதனை அதிக விண்ணப்பங்கள் வரப்பெற்ற மற்ற பாடப்பிரிவுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

5. ஒரு பாடப்பிரிவில் அதிக விண்ணப்பங்கள் பெறப்படும் பட்சத்தில், உலகளாவிய அளவில் QS தர எண் பெற்ற கல்வி நிறுவனங்கள், University Grants Commission (UGC), National Institutional Ranking Framework (NIRF) ஆகிய நிறுவனங்களின் தரவரிசையில் இடம்பெற்றுள்ள பல்கலைக்கழகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

6. அறிவியல் சார்ந்த பாடப்பிரிவுகளில், Advance Science, மருத்துவம் (Medical) மற்றும் தொழில்நுட்பம் (Technology) போன்ற பாடப்பிரிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

7. மதிப்பெண் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்வு செய்யும் போது, ஒரு இடத்திற்கு இரண்டுக்கும் மேற்பட்டோர் ஒரே விழுக்காடு மதிப்பெண் பெற்றிருப்பாராயின், மாணாக்கர்களின் வயதின் அடிப்படையில் வயதில் மூத்தோருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

II. தகுதிகள் :

8. இத்திட்டத்தின்கீழ் பயனடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப ஆண்டு வருமான வரம்பான ரூ.8.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

9. இத்திட்டத்தின் கீழ் கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க முதுகலைப் பட்டப் படிப்பில் 55% விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

10. வயது வரம்பு ஆண்களுக்கு 50 மிகாமலும் மற்றும் பெண்களுக்கு 55 மிகாமலும் இருக்க வேண்டும்.

11. இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் மாணாக்கரில் பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

III. இதர நிபந்தனைகள் :

12. விண்ணப்பத்துடன் சாதிச்சான்று, வருமானச் சான்று, கல்விச் சான்று, ஆதார் விவரம் மற்றும் முனைவர் பட்டப்படிப்பிற்கான நுழைவு சான்று ஆகிய சான்றிதழ்களை இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

13. பல்கலைக் கழகம் / கல்லூரிகளில் ஊக்கத்தொகை / ஊதியத்துடன் கூடிய படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படாது.

14. கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் (ஊதியமில்லா விடுப்பில் இருந்தாலும் கூட) ஊக்கத்தொகை பெற தகுதியற்றவராவர்.

15. மாணவரின் ஆராய்ச்சி திருப்திகரமாக இல்லை என தெரிய வந்தால், அம்மாணாக்கருக்கு கல்வி ஊக்கத்தொகை நிறுத்தப்படும்.

16. ஓர் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் அடுத்த ஆண்டு மட்டுமே விண்ணப்பிக்க இயலும். மேலும் கடந்தாண்டு ஊக்கத்தொகை பெற்ற மாணாக்கர் மட்டுமே புதுப்பித்தல் (Renewal) மாணாக்கராக கருத முடியும்.

17. கல்வி நிறுவன முதல்வரது கையொப்பம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரையுடன் விண்ணப்பம் வரப்பெற வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

18. தவறான தகவல்களுடன் விண்ணப்பித்து கல்வி ஊக்கத்தொகை பெற்ற மாணாக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் நீக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி ஊக்கத்தொகை அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டும்.

19. மேற்கண்ட தகவல்களை மாணவர்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் ஒட்டியும், சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு தகவல் தெரிவித்து மாணவர்களை விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறது

20. விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து உரிய ஆவணங்கள், கல்வி நிறுவனத் தலைவர் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரையுடன் ஆணையர், ஆதிதிராவிடர் நல ஆணையரகம், எழிலகம்(இணைப்பு), சேப்பாக்கம், சென்னை - 600005. என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விண்ணப்ப படிவத்தில் எவ்வித கலமும் விடுபடாமல், முழுமையாக பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31.01.2026 அன்று மாலை 5.45 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.